

50 Ophir Road, Singapore 188690

## Connect With Us


**Fr Alphonsus Dominic - Parish Priest**

**Fr Elias Solomon - Assistant Priest**

www.ourladyoflourdes.sg

colol.secretariat@catholic.org.sg

+65 6294 0624

ChurchOfOurLadyOfLourdes

ladylourdes.sg


04 Oct 2026

### Eucharistic Celebrations

**Monday to Friday**
12:30pm (E) | 7:00pm (T)

**Saturday**
4:00pm (E) | 6:30pm (E)

**Sunday**
7:30am (E) | 9:30am (T)
11:30am (E) | 6:30pm (T)

3:00pm (1st Sun of the month) (M)

3:00pm (2nd Sun of the month) (I)

**Public Holidays**
9:00am (E) | 10:00am (T)

*(E) English* — *(T) Tamil*
*(M) Malayalam* — *(I) Indonesian*

***Sacrament of Reconciliation***
*is available 30mins before.*

### Devotions

**Monday to Friday**

| | |
|---|---|
| 11:45am | Rosary |
| *(Except Tuesdays)* | |
| 11:45am | Divine Mercy |
| *(Tuesdays Only)* | |

**Saturday**

| | |
|---|---|
| 5:30pm | Our Lady of Good Health, Vailankkani |

### Opening Hours

**Parish Office**

| | |
|---|---|
| Mon - Fri | 10:00am to 6:00pm |
| Saturday | 2:00pm to 8:00pm |
| Sunday | 9:00am to 2:00pm |

**Adoration Room**

| | |
|---|---|
| Daily | 8:00am to 8:00pm |

**Bookshop**

| | |
|---|---|
| Saturday | 5:00pm to 8:00pm |
| Sunday | 8:30am to 1:00pm |

(Closed on Public Holidays)

# 27th Sunday in Ordinary Time

| 1st Reading | 2nd Reading | Gospel |
|---|---|---|
| Is 5:1-7 | Phi 4:6-9 | Matt 21:33-43 |

***The Vineyard of the Lord***

*The Church rejoices in being the vineyard of the Lord. At the same time we have cause here for much heart-searching and prayer.*

This weekend we are reminded that God trusts us to care for what He has given. Like a vineyard, our world is meant to bear good fruit. God gives everything we need to grow in love, faith, and kindness. Yet, sometimes we forget our role as caretakers and live for ourselves instead.

In the First Reading from the prophet Isaiah and the Responsorial Psalm we hear the story of a vineyard that has gone wild. God planted it with care, but it produced only bitter fruit. These words remind us that blessings are not enough if they do not lead to justice and mercy. God wants actions that show love and respect for others.

In the Gospel, Jesus tells a parable about tenants who refuse to honour the landowner. They reject his servants and even his son. It is a warning for anyone who ignores God's message. Today, we are called to look at our lives and ask if we are producing good fruit for God's kingdom.

**Challenge Yourself**
Notice the gifts God has entrusted to you. Use them to serve others and build His kingdom.

**Action Step**
Do one act of kindness or mercy this week. Offer it to God in gratitude.

"The kingdom of God will be given to a people who will produce its fruit.
**- Matthew 21:43**

*(Adapted from young-catholics.com)*

# Around the Parish







# Around the Diocese













# Word Search

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S | C | R | I | P | T | U | R | E | S | L | I | S | T | E | N |
| V | I | N | E | Y | A | R | D | N | V | I | N | T | A | G | E |
| S | E | R | V | A | N | T | S | O | J | U | S | T | I | C | E |
| L | I | P | P | R | A | Y | E | R | C | W | C | O | R | N | K |
| I | F | R | U | L | T | H | A | N | H | P | O | W | S | U | K |
| N | E | A | G | R | A | P | E | S | I | R | M | E | C | I | E |
| H | R | I | G | R | O | N | T | R | E | O | M | R | R | N | W |
| E | T | S | T | N | I | V | T | R | F | D | A | F | I | T | I |
| R | I | E | H | E | D | G | E | E | U | U | N | R | K | E | N |
| I | L | E | L | D | E | R | S | R | D | C | D | U | E | G | E |
| T | E | N | A | N | T | S | U | R | G | E | D | I | Y | R | P |
| A | P | O | R | B | U | I | L | D | E | R | S | T | S | I | R |
| N | L | B | V | I | R | T | U | O | U | S | O | N | T | T | E |
| C | A | L | A | N | D | O | W | N | E | R | U | W | O | Y | S |
| E | N | E | T | H | A | N | K | S | G | I | V | I | N | G | S |
| W | O | N | D | E | R | F | U | L | H | E | I | R | E | S | S |

Can you find these 30 words from today's readings?

| | | |
|---|---|---|
| VINEYARD | PRAYER | VINTAGE |
| FERTILE | THANKSGIVING | SERVANTS |
| TOWER | TRUE | PRODUCE |
| PLANTED | NOBLE | HEIR |
| GRAPES | VIRTUOUS | INHERITANCE |
| HEDGE | PRAISE | TENANTS |
| OVERGROWN | CHIEF | SCRIPTURES |
| COMMAND | ELDERS | BUILDERS |
| JUSTICE | LANDOWNER | KEYSTONE |
| INTEGRITY | WINEPRESS | WONDERFUL |



50 ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

**தொடர்புகளுக்கு:**

**பங்குத்தந்தை : அருட்தந்தை அல்போன்ஸ் டோமினிக்**
**உதவித் தந்தை : அருட்தந்தை எலியாஸ் சாலமோன்**

www.ourladyoflourdes.sg
colol.secretariat@catholic.org.sg
+65 6294 0624
ChurchOfOurLadyOfLourdes
ladylourdes.sg

04 அக்டோபர் 2026

## திருப்பலி & பக்தி முயற்சிகள்

<u>திங்கள் முதல் வெள்ளி</u>
திருப்பலி (English) 12:30pm
திருப்பலி (தமிழ்) 7:00pm

<u>சனி</u>
திருப்பலி (English)
4:00pm | 6:30pm

<u>ஞாயிறு</u>
திருப்பலி (English)
7:30am | 11:30am

திருப்பலி (தமிழ்)
9:30am | 6:30pm

திருப்பலி (மலையாளம்)
3:00pm (மாதத்தின் 1-ஆம் ஞாயிறு)

திருப்பலி (இந்தோனேசியன்)
3:00pm (மாதத்தின் 2-ஆம் ஞாயிறு)

<u>பொதுவிடுமுறை நாட்கள்</u>
திருப்பலி (English) 9:00am
திருப்பலி (தமிழ்) 10:00am

**திருப்பலிக்கு 30 நிமிடத்திற்கு முன் பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்**

**<u>பக்தி முயற்சிகள்</u>**

<u>திங்கள் முதல் வெள்ளி (செவ்வாய் தவிர)</u>
திருச்செபமாலை 11:45am

<u>செவ்வாய்</u>
இறை இரக்க செபம் 11:45am

<u>சனிக்கிழமை</u>
தூய வேளாங்கண்ணி அன்னை செபம் 5:30pm

<u>பங்கு அலுவலகம்</u>
திங்கள்-வெள்ளி 10am to 6pm
சனி 2pm to 8pm
ஞாயிறு 9am to 2pm

<u>திவ்விய நற்கருணை அறை</u>
திங்கள் - ஞாயிறு 8am to 8pm

<u>புத்தகக் கடை</u>
சனி 5pm to 8pm
ஞாயிறு 8:30am to 1pm

**(பொதுவிடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும்)**

## பொதுக்காலம் 27ஆம் ஞாயிறு

| **முதல் வாசகம்** | **இரண்டாம் வாசகம்** | **நற்செய்தி** |
|---|---|---|
| எசா 5:1-7 | பிலி 4:6-9 | மத் 21:33-43 |

## ஆண்டவரின் திராட்சைத் தோட்டம்

திருச்சபை ஆண்டவரின் திராட்சைத் தோட்டமாக இருப்பதில் மகிழ்ச்சி கொள்கிறது. அதே வேளையில், ஆழ்ந்த சுய பரிசோதனையும் செபமும் இதற்கு தேவையாக இருக்கின்றன.

கடவுள் நமக்கு அளித்தவற்றை முறையாகப் பராமரிக்கும் பொறுப்பை அவர் நம்மிடம் ஒப்படைத்துள்ளார் என்பதை இந்த வார இறுதியில் நாம் நினைவுகூருகிறோம். ஒரு திராட்சைத் தோட்டத்தைப் போலவே, நம் உலகமும் நற்கனிகளைத் தரும் நோக்கம் கொண்டது. அன்பு, நம்பிக்கை மற்றும் கருணை ஆகியவற்றில் நாம் வளரத் தேவையான அனைத்தையும் கடவுள் நமக்கு வழங்குகிறார். இருப்பினும், சில நேரங்களில் பராமரிப்பாளர்களாகிய நாம், அதனை வளர்ப்பதற்கான நமது பங்கை மறந்துவிட்டு, நமக்காக மட்டும் வாழ்கிறோம்.

ஏசாயா இறைவாக்கினரின் முதல் வாசகத்திலும், பதிலுரைப்பாடலிலும், பராமரிப்பின்றிப் பாழாகிப்போன ஒரு திராட்சைத் தோட்டத்தின் கதையைக் கேட்கிறோம். கடவுள் அதை மிகுந்த அக்கறையுடன் நட்டு வளர்த்தார்; ஆனால் அது கசப்பான கனிகளை மட்டுமே தந்தது. நீதியையும் இரக்கத்தையும் விளைவிக்காத ஆசிகள் முழுமையானவை அல்ல என்பதை இச்சொற்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. மற்றவர்கள் மீது அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தும் செயல்களையே கடவுள் விரும்புகிறார்.

நற்செய்தியில், நில உரிமையாளரை மதிக்க மறுக்கும் குத்தகைதாரர்களைப் பற்றிய ஒரு உவமையை இயேசு கூறுகிறார். அவர்கள் உரிமையாளரின் பணியாளர்களையும், ஏன் அவரது மகனையும் கூட நிராகரிக்கிறார்கள். கடவுளின் இந்த செய்தியைப் புறக்கணிக்கும் எவருக்கும் ஒரு எச்சரிக்கையாக அமைகிறது. இன்று, நம் வாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்து, கடவுளின் அரசிற்காக நாம் நற்கனிகளை விளைவிக்கிறோமா என்று நம்மையே கேட்டுக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

*(Adapted from young-catholics.com)*

## பங்குச் செய்திகள்

### திருவிவிலிய பகிர்வு

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 11:30 மணிமுதல்
மதியம் 12:30 மணிவரை



நமது லூர்து அன்னை ஆலயத்தில் தமிழில் இறைவார்த்தைப் பகிர்வு நடைபெற்று வருகிறது. இதில் பங்குகொண்டு ஆன்மீகப் பயன்பெற அழைக்கின்றோம்.

### திருப்பலி நேர மாற்றங்கள்

**03/04 அக்டோபர் 2026 முதல்**
**(இந்த வாரம் முதல்)**

**ஆங்கிலம்**

சனிக்கிழமை
மாலை 4:00, 06:30 மணி
ஞாயிற்றுக்கிழமை
காலை 07:30, 11:30 மணி

**தமிழ் (நேர மாற்றமில்லை)**

ஞாயிற்றுக்கிழமை
காலை 09:30 மணி
மாலை 06:30 மணி

**ஒப்புரவு திருவருட்சாதனம்**
ஒவ்வொரு திருப்பலிக்கும்
30 நிமிடங்களுக்கு முன்னர்
வழங்கப்படும்.

### தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

உங்கள் பிள்ளைகள் தமிழில் ஆன்மீகக் கல்வியை கற்க விரும்புகிறீர்களா?

தூய லூர்து அன்னை ஆலயத் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9:30 மணி தமிழ்த்திருப்பலி முடிந்ததும் காலை 10:45மணி முதல் 11:45 மணிவரை நடைபெறுகின்றன.



**தொடர்புக்கு: பங்கு அலுவலகத்தை நாடவும்.**

### திருத்தந்தை 14-ஆம் லியோவின் அக்டோபர் மாதத்திற்கான செபக்கருத்து

மனநலப் போராட்டங்கள் பெரும்பாலும் கண்ணுக்குத் தெரியாதவையாக இருக்கின்றன, மேலும் அவற்றைச் சுற்றியுள்ள களங்கம் மக்களை இன்னும் தனிமையாக உணரச் செய்கிறது. இந்த அக்டோபர் மாதம், திருச்சபை முழுவதும் மனநலப் பணிகள் நிறுவப்பட வேண்டும் என்ற திருத்தந்தை பதினான்காம் லியோவின் திருவுளத்திற்காக நாம் ஜெபிப்போம்; இது மனநோயுடன் வாழ்பவர்கள் எதிர்கொள்ளும் களங்கத்தையும் பாகுபாட்டையும் கடக்க உதவும். இரக்கத்துடன் செவிமடுக்கவும், தீர்ப்பின்றி பதிலளிக்கவும், ஒவ்வொருவரும் கவனிக்கப்பட்டதாகவும், வரவேற்கப்பட்டதாகவும், நேசிக்கப்பட்டதாகவும் உணரும் சமூகங்களைக் கட்டியெழுப்ப நமது செபம் நம்மை ஊக்குவிக்கட்டும்.



**மனநலப் போராட்டங்களோடு வாழ்பவர்களுக்காக!**